# பொதுமக்களுக்கான அறிவித்தல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# பிரமிட் திட்டங்களில் பங்குபற்றுவது தண்டனைக்குரியதொரு குற்றமாகும்!

இலங்கை மத்திய வங்கிக்கு கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில், பின்வரும் நிறுவனங்கள்/செயலிகள் வங்கித் தொழிற் சட்டத்தின் 83(இ) பிரிவின் பிரகாரம் தடைசெய்யப்பட்ட திட்டங்களை நடாத்துகின்றனவா அல்லது நடாத்தியுள்ளனவா என்பதைக் கண்டறிய, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித் தொழிற் சட்டத்தின் 83(இ) பிரிவின் பிரகாரம் விசாரணைகள் நடாத்தப்பட்டன. அதன்படி, இலங்கை மத்திய வங்கியானது கீழே பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்கள்/செயலிகள் சொல்லப்பட்ட சட்டத்தின் 83(இ) பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக தடைசெய்யப்பட்ட திட்டங்களை நடாத்துகின்றன அல்லது நடாத்தியுள்ளன எனத் தீர்மானித்துள்ளது. மேலும், இலங்கை மத்திய வங்கியானது வங்கித்தொழில் சட்டத்தின் 83(இ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் குற்றவியல் வழக்குகளைத் தொடுப்பதைப் பரிசீலனையில் கொள்ளுமாறு கௌரவ சட்டமா அதிபரைக் கோரியுள்ளது.

**இந்த பட்டியலானது 24.08.2023 இல் மத்தியவங்கியால் வெளியிடப்பட்ட நிறுவனங்கள்/ செயலிகளின் பெயர்களுக்கு மேலதிகமானதாகும்.**

1. **Beecoin App/Sunbird Foundation**
2. **Fast Win (Pvt) Ltd**
3. **Fruugo Oline App/ Fruugo Oline (Pvt) Ltd**
4. **Genesis Business School/ Era Miracle (Pvt) Ltd**
5. **Isimaga International (Pvt) Ltd**
6. **Ledger Block**
7. **Qnet/Questnet**
8. **Ride to Three Freedom (Pvt) Ltd**

1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 83(இ) பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக திட்டமொன்றினை நேரடியாக அல்லது மறைமுகமாகத் தொடங்குகின்ற, வழங்குகின்ற, ஊக்குவிக்கின்ற, விளம்பரப்படுத்துகின்ற, நடாத்துகின்ற, நிதியளிக்கின்ற, முகாமைசெய்கின்ற அல்லது பணிக்கின்ற எவரேனும் ஆள் தண்டனைக்குரிய தவறொன்றிற்கு ஆளாதல் வேண்டும்.

தவறுக்கான தண்டனைகளானது மூன்று வருடங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு சிறைத்தண்டனை அல்லது ஒரு மில்லியன் ரூபாயை விஞ்சாத தண்டப்பணம் அல்லது சிறைத்தண்டனை மற்றும் தண்டப்பணம் ஆகிய இரண்டும் என்பவற்றை உள்ளடக்குகின்றன. தவறானது வேண்டுமென்று அல்லது அறிந்துகொண்டு அல்லது செயற்பாடானது எவரேனும் வேறு ஆளுக்கு சேதத்தை விளைவிக்கும் அல்லது தீங்குபயக்கும் என்ற அறிவுடன் புரியப்படுகின்றவிடத்து, அவர்/அவள் மூன்று ஆண்டுகளுக்கு குறையாத மற்றும் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத காலமொன்றுக்கு கடூழிய சிறைத்தண்டனைக்கும் அத்துடன் ரூபாய் இரண்டு மில்லியன் அல்லது திட்டத்தில் பங்கேற்பாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றதாக வெளிப்படுத்தப்பட்ட அல்லது அறிவிக்கப்பட்ட இலங்கை நாணயத்திலான ஒன்றுகூட்டிய தொகையின் இருமடங்கு, இதில் எது உயர்வானதோ அதனைக் கொண்ட தண்டப்பணத்திற்கும் ஆளாதல் வேண்டும்.

அதற்கமைய, சட்டத்தினால் தண்டிக்கப்படக்கூடிய அத்தகைய நடவடிக்கைகளிலிருந்து விலகியிருக்குமாறு பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
☎ (Hotline) 1935 / +94 11 247 7966